பூச்சித் தடுப்பு

*1104—**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரவையின் அனுமதியோடு திருத்திய விடையினை அளிக்கின்றேன். மத்திய, மாநில அரசு நிதியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் பருத்தி தொழில்நுட்பக் குழுமத்தின் சிறு குழுமம்-II திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் நடத்தப்பட்டு, பருத்திப் பயிரைத் தாக்கும் பூச்சிகள், அதன் இயற்கை எதிரிகள், ஒருங்கிணைந்த பூச்சி நிருவாகம் முதலியன குறித்து போதிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு 2011-2012 ஆம் ஆண்டு 100 வயல்வெளிப் பள்ளிகள் ரூ.17.00 இலட்சம் நிதி இலக்கில் மாநிலம் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வினத்தின்கீழ் பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகள் தவிர, மற்ற பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்தும், அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் போதிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக்கூடிய பஞ்சாலைகள் அதிகம் இருக்கின்றன. இப்போது 5 இலட்சம் bale பருத்திதான் உற்பத்தி செய்யப்படுகிறது. நம்முடைய தமிழகத்திற்கு 45 இலட்சம் bale தேவை. எனவே, பருத்தியை அதிகமாக உற்பத்தி

செய்வதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உண்டா? அப்படியானால், பருத்தியை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு, விளைவிக்கக்கூடியவர்களுக்கு மானியம் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் உங்கள் கேள்வி, பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தது. ஆனால், நீங்கள் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கேட்கிறீர்கள். அதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு சவால் விடுகிற முறையில் நீர் நிலைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஆகாயத் தாமரைச் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும், ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்ட பார்த்தீனியம் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும் அரசு முழுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கும் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

33—

நியாய விலைக் கடை

***1147—திரு. கே.பி. கந்தன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—